## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

எ.சா. 1

| **பெயர்** | திருமதி.சுந்தரி | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | அவையன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **06.10.2025.** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் வழங்க அழைப்பாணை வந்தது. கடந்த 02.11.2020 அன்று அதே காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்த போது, காலை 11.30 மணியளவில் சென்ராயன் என்பவர் என்னிடம் வந்து தன் மனைவி என்னுடன் வாழாமல் சென்றுவிட்டதாகவும், அவரை சமமாதானம் செய்து தன்னுடன் சேர்ந்து வைக்கும் படி புகார் கொடுத்தார். நான் சென்ராயனுக்கும், அவரின் மனைவி வனிதாவிற்கும், குழந்தைகள் நலனை மனதில் கொண்டு சேர்ந்து வாழும் படி குடும்ப ஆலோசனை வழங்கினேன். அப்போது அவரின் மனைவி சென்ராயனுடன் சேர்ந்து வாழ்வதாக சொன்னார். சென்ராயன் கொடுத்த புகாரில் முருகன் என்பவரின் துண்டுதலின் பேரில் தன்னுடைய மாமனாரின் சொத்தை அபகரிக்கரிக்க வேண்டும் என்பதற்காக சென்ராயன் மனைவி சென்ராயனுடம் வாழாமல் சென்றுவிட்டதாக சொல்லியுள்ளார். அந்த புகாரில் தன்னுடைய மனைவியின் மீதும், தன்னுடைய மனைவியை தன்னுடன் வாழவிடாமல் தடுத்து வருகின்ற முருகன் என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்கும் படி சொல்லியுள்ளார். அந்த புகாரில் அய்யனார்,த/பெ.கூலு என்பவர் பற்றி எதுவும் சொல்லவில்லை. சென்ராயனால் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்திலும் அய்யனார்,த/பெ.கூலு என்பவர் பற்றி கூறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. சென்ராயன் கொடுத்த வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் மொக்கைராஜ்,த/பெ.கக்கணன் என்பவர் கையொப்பம் செய்துள்ளார். சென்ராயன் கொடுத்த புகார், புகார் மனுரசீது எண்.240/2020, சென்ராயன் மற்றும் அவரின் மனைவி ஆகியோர் கொடுத்த வாக்குமூலம் ஆகிய வாக்குமூலங்களின் அசலும்,

புகைப்பட நகலும் பெற்றப்பட்ட, புகைப்பட நகல்கள் அசல் ஆவணத்துடன் ஒப்பிடப்பட்டு புகைப்பட நகல்களில் சென்ராயன் கொடுத்த புகார் நகல் **எ.த.சா.ஆ.1** ஆகும். புகார் மனுரசீது எண்.240/2020 நகல் **எ.த.சா.ஆ.2** ஆகும். சென்ராயன் மற்றும் அவரின் மனைவி ஆகியோர் கொடுத்த வாக்குமூலம் நகல் **எ.த.சா.ஆ.3** ஆகும். அசல் ஆவணங்கள் திருப்ப கொடுக்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எந்த எந்த வருடத்தில் இருந்து எந்த எந்த வருடம் வரை வேலை பார்த்தேன் என்றால் 2020, 2021,2022 ஆகிய வருடங்களில் வேலை பார்த்தேன். அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு பொதுவாக குடும்ப பிரச்சனைகள் மட்டுமே வரும் என்றால் சரிதான். மேற்படி ஆண்டுகளில் நான் எத்தனை வழக்குகள் விசாரித்துள்ளேன் என்றால் சுமார் 50 க்கு மேற்பட்ட வழக்குகளை விசாரித்துள்ளேன். அதில் எத்தனை வழக்குகளுக்கு மனு ரசீது போட்டுள்ளேன் என்றால் 50 மேற்பட வழக்குகளில் மனு ரசீதுகள் போட்டுள்ளேன். நான் முதல் விசாரணையில் சென்ராயன் புகார் கொடுத்த நேரம் காலை 11.00 மணி என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சென்ராயனின் சொந்த ஊர் குரும்பட்டி ஆகும். அந்த ஊருக்கு காவல் நிலையத்திற்கும் எத்தனை கிமீ இருக்கும் என்றால் 20 கிமீ இருக்கும். 20 கிமீ செல்வதற்கு சுமார் 1 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். சென்ராயன் இறந்துவிட்டதாக தகவல் தெரியுமா என்றால் சமீபகாலமாக தான் தெரியும். அவர் எப்படி இறந்தார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அவர் தற்கொலை செய்து இறந்து கொண்டார் என்று தெரிந்து கொண்டேன். வேறு என்ன தெரிந்து கொண்டேன் என்றால் வேறு எதுவும் தெரியவில்லை. சென்ராயன் கொடுத்த புகாரில் நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக குடும்பத்தில் நடக்கும் சிறு சிறு பிரச்சனைகள் பிற்காலத்தில் அது முன்விரோதமாக மாறிவிடும் என்றால் சரிதான். அந்த முன்விரோத்தின் காரணமாக கொலை நடைபெறுகிற வாய்புண்டு என்றால் உண்டு. ( எதிரி தரப்பில் இந்த கேள்வி இந்த இடத்தில் தேவையில்லை என்று ஆட்சேபணை தெரிவித்தார்) நான் வழங்கிய மனு ரசீதில் குடும்ப பிரச்சனை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.த.சா.ஆ.2 எதிர்மனுதாரர் வனிதா என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சென்ராயன் வாக்குமூலத்திலோ, வனிதாவின் வாக்குமூலத்திலோ தங்கள் சேர்ந்து வாழ்வதாக தான் சொல்லிருக்கிறார்கள் என்றும், முருகன் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். வானிதா என்று விசாரணைக்கு ஆஜரானார் என்று தேதி சொல்ல முடியுமா என்றால் அன்றைய தினமே ஆஜரானார். என்னிடம் வாக்குமூலம் கொடுத்த வனிதாவை பார்த்தார் எனக்கு அடையாளம் தெரியுமா என்றால் தெரியும். அவர் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளாரா என்றால் ஆஜராகியுள்ளார். முன்விரோதம் காரணமாக வனிதாவும், அவருடன் சேர்ந்து

மற்றொருவரும் சென்ராயனை கொலை செய்திருக்கிறார்கள் என்றும், அது சம்பந்தமாக நிலக்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.10.06 20:11:47 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.